விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 24
ஒலி 353 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 21 வியாழக்கிழமை (07.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழ் மக்களின் இருப்பை இல்லாது ஒழிக்க முடியாது

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு




(கொழும்பு)

துப்பாக்கிகளையும், குண்டுகளையும் வைத்துக் கொண்டு தமிழர்களின் இருப்பை அழிக்க நினைத்தால் அது ஒருகாலமும் உங்களால் முடியாது என, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ➤15

## புலிகளை நினைவூட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் உத்தரவு



(கொழும்பு)

மாவீரர் தினத்தில் புலிகளை நினைவுபடுத்தி மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ➤15

## ரணிலின் ஆட்சி தொடர்ந்தால்

# புலிகள் மீண்டும் உயிர்த்தெழுவர்

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



*(கொழும்பு)*

ஜனாதிபதி ரணிலின் ஆட்சி தொடர்ந்தும் நடைபெற்றால் விடுதலைப் புலிகள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

### அவிசாவளையில்
## விலை மதிப்பற்ற இரத்தினக் கல் கண்டெடுப்பு

(கொழும்பு)

அவிசாவளை பகுதியிலுள்ள சுரங்கமொன்றிலிருந்து 22 கிலோகிராம்நிறை கொண்ட விலைமதிப்பற்ற இரத்தினக் கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. ➤15

### 5 நாட்களில்
## 1,534 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர்

(கொழும்பு)

நாளாந்தம் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 250ஐ விட அதிகரிப்பதாகவும்,

இம்மாதம்முதல் 5 நாட்களில் 1534 ➤15

## உழவு இயந்திரத்தின் கலப்பையில் சிக்குண்ட

### மூன்றரை வயது சிறுவன் பலி
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வீட்டுக் காணியினை உழவு இயந்திரத்தினால் துப்புரவு செய்து கொண்டிருக்கும்போது உழவு இயந்திரத்தின் கலப்பையில் சிக்குண்ட மூன்றரை வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

வவுனியா நெடுங்கேணி பனையாண் ➤15

### வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை

## மூன்று பொலிஸ் சாட்சிகள் உட்பட 5 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் மூன்று பொலிஸ் சாட்சிகள் மற்றும் இரண்டு சிவில் சாட்சிகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் தமது சாட்சியங்களை பதிவு செய்துள்ளன.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வரு ➤15

## டெங்கை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

மழைகாலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையை,கருத்தில் கொண்டு அதனை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய தரப்புக்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசியடெங்கு ஒழிப்புப் பிரிவுடன், சுகாதார ➤02

### ஆண்டிறுதியில்
## கார்களின் விலை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த சில மாதங்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விலை குறைந்திருந்த கார்களின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. ➤15

## தமிழக மீனவர்கள் 17 பேர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பரப்புக்களுக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் மூன்று படகுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து நேற்றுக் காலை மூன்று படகுகளில் புறப்பட்ட மீனவர்களே நேற்று மாலை இலங்கையின் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம்கடற் பரப்புக்களுக்குள் ➤15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருட்களின் விலைகளில் வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்பதற்காக, விலைகளில் வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது. உலக சந்தை நிலைவரம் மற்றும் டொலரின் பெறுமதி என்பவற்றின் அடிப்படையிலேயே எரிபொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை (06) இடம்பெற்ற போதே இதனைத் தெரிவித்தார் மேலும் குறிப்பிடுகையில், வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்த உடனேயே போட்டித்தன்மை ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது.

எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் இதனால் சிறந்த பலன் கிடைக்கும். காரணம் எரிபொருட்களை இறக்குமதி செய்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், ஐ.ஓ.சி.யும் மாத்திரம் எரிபொருட்களை இறக்குமதி செய்த போது, ஒரு கட்டத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு டொலர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

இதனால் முழு நாட்டிலும் எரிபொருள் அற்ற நிலைமை கூட ஏற்பட்டது.

இவ்வாறான நிலைமை இனி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே 3 நிறுவனங்களுக்கு போட்டித்தன்மையுடன் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் எரிபொருட்களின் விலைகளை இவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க முடியாது. என்றார். (ம-7)

## டெங்கை...

இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்து வருவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டதோடு, அரச நிறுவனங்கள், படகு துறைகள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் குடம்பிகள் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்படுத்த முப்படையினரின் உதவியுடன் விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சாகல ரத்நாயக்க பொலிசாருக்கு அறிவிறுத்தினார்.

நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான விரைவான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களை அறிவுறுத்தும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அறிவிப்பொன்றை விடுக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியன இணைத்து இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான விரைவான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் சாகல ரத்நாயக்க அறிவுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கான திங்கட்கிழமையன்று டெங்கு ஒழிப்பு பிரிவை மீண்டும் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)


கனடாவில் வேலைவாய்ப்பு
மற்றும்
TOURIST விசா
தேவைப்படுபவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.

◆ 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
◆ பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.
Hybrid international hub (pvt)ltd.
யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
(C-7826)
தொடர்புகளுக்கு
077 815 5920, 076 250 0098,
021 222 1265



மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7825)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470



34 ஆம் ஆண்டு 1 ஆம் ஆண்டு
நினைவு தின அழைப்பு



பிறப்பு: 14.10.1968 இறப்பு: 07.12.1989



பிறப்பு: 20.09.1970 இறப்பு: 18.11.2022

அமரர் ஐயம்பிள்ளை
தவராசா

அமரர் ஐயம்பிள்ளை
யோகராசா (யோகி)
(களஞ்சியப் பொறுப்பாளர்
நிதிக்கிளை யாழ்.பல்லைக்கழகம்)

அன்புடையீர்!
கடந்த 07.12.1989 மற்றும் 18.11.2022 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரர்கள் அமரர் **ஐயம்பிள்ளை தவராசா**, அமரர் **ஐயம்பிள்ளை யோகராசா (யோகி)** ஆகியோரின் 34ஆம் ஆண்டு, 1ஆம் ஆண்டு நினைவு தின ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (07.12.2023) வியாழக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் தாயாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(18111)
இங்ஙனம்
குடும்பத்தினர்



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
புதிய மாணவர்களை அனுமதித்தல் 2023 / 2024
13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி (தொழில் கல்வி) நிகழ்ச்சித் திட்டம்

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பப் படிவத்தினை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

கற்கை நெறிகள் விபரம்
1. பிரயோக தோட்டக்கலை
2. கணனி வடிவமைப்பு
3. மோட்டர் இயந்திர தொழில்நுட்பம்
4. சுற்றுலா மற்றும் விருந்தினர் உபசரிப்பு
5. உணவு பதப்படுத்தல் கல்வி
6. மின் மற்றும் மின் வலு தொழில்நுட்பம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 17.12.2023 அதிபர்
(C-7819)



அல்லாரை தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (வது)
அல்லாரை வடக்கு, கொடிகாமம். பதிவு இல. J/73

தும்பு தொழிற்சாலையை வாடகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்.

அல்லாரை தும்பு தொழிற்சாலை கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான தும்பு தொழிற்சாலை வாடகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

தொழிற்சாலையை வாரநாட்களில் மு.ப 9.00 மணியில் இருந்து 4.00 மணி வரைக்கும் பார்வையிடமுடியும். முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மேற்படி தும்பு தொழிற்சாலையை வாடகைக்கு பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 08.12.2023 இல் இருந்து 22.12.2023 ஆம் திகதிக்கு முன் **தலைவர் அல்லாரை தும்பு தொழிற்சாலை கூட்டுறவுச் சங்கம் அல்லாரை வடக்கு கொடிகாமம்** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

தங்களது விண்ணப்பத்தில் தங்களது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இல., தே.அ.அ.இல. மற்றும் செலுத்தக் கூடிய மாதவாடகை இயலுமை போன்றவற்றை தெளிவாக குறிப்பிடவும்.

நெறியாளர் சபைத் தீர்மானமே முடிவானதாகும்.

தலைவர் தொ.இல. : 076 378 7001, 077 532 8459
முகவரி : அல்லாரை தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.
(18125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதிகளை தொடர்ந்து மீறும் இலங்கை

## பிரிட்டன் சுட்டிக்காட்டு

(லண்டன்)

**சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளையும் மீறி இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய விவகாரங்களிற்கான அமைச்சர்களில் ஒருவரான லியோ டொச்செரி தெரிவித்துள்ளார்**



பிரிட்டனின் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து பிரிட்டன் அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்கின்றது. குறிப்பாக தமிழர்களின் நிலைமை குறித்து அங்கு காணப்படும் நிலவரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மனதை வருத்தும் விதத்தில் வலுவான விதத்தில் இங்கு முன்வைத்தார்கள்.

மனித உரிமைகள் விடயத்தில் முக்கிய பிரிட்டனின் கரிசனைக்குரிய 32நாடுகளில் ஒன்று இலங்கை. இலங்கையின் பல விடயங்கள் தொடர்பில் நாங்கள் கரிசனை செலுத்துகின்றோம்

இலங்கையில் பல வருடகாலமாக காணப்படும் இன,மத பதற்றங்களை தொடர்ந்து தமிழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்படுவது ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவது எங்கள் அனைவருக்கும் தெரியும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச தராதரத்திலான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் நீண்டகாலமாக வாக்குறுதியளித்து வருகின்ற போதிலும் அந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதிகளையும் சர்வதேச கடப்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டும்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நினைவுகூரலிற்கு எதிராக பொலிஸாரின் கடுமையான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் கண்காணித்தல்கள் மிரட்டல்கள் போன்றன இடம் பெறுகின்றன.குறிப்பாக இவை தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை இலக்கு வைத்து இடம்பெறுகின்றன.

முன்னாள் போராளிகளும் காணாமல்போனவர் களின் உறவினர்களும் கண்காணிக்கப்படுவதுடன் அச்சுறுத்தப் படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

---

## மத்தள விமான நிலையம் ரஷ்ய-இந்திய நிறுவனத்திடம்

(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை ரஷ்ய - இந்திய கூட்டு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்ததாக, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் குறித்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்கீழ் மத்தள விமான நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும்.

அங்கு பணியாற்றும் விமான நிலைய ஊழியர்களுக்கான சம்பளமும் அந்நிறுவனத்தினூடாக வழங்க திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (நி-5-6)

## ஐயப்ப பக்தர்களுக்கான விசா எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள் ளார்.

இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தின் நிர்வாக குழுவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, விசாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் செல்லுபடியாகும் கால எல்லையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு 100 விசாக்கள் மாத்திரமே வழங்கப்படுவதுடன் அதன் செல்லுபடி காலம் ஒரு மாதமாக காணப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவுடன் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து ரையாடியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் செல்லுபடியாகும் கால எல்லையை 2 மாதங்களாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## யாழ்.பல்கலைக்கழக சட்ட பீடத்தில் தமிழ் மொழிக்கு அனுமதியளிக்க வேண்டும்

### சிறீதரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்லூரியை தொடர்வதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்களின் நலன்களுக்காக தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை முல்லைத்தீவு மாங்குளத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்ட கல்வியை தொடர வாய்ப்பில்லை.

ஆகவே தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சட்டத்தைக் கற்கும் வாய்ப்பை யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்க வேண்டும்.



அத்துடன் யாழ்.தீவக பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில் தான் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர் களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## 50,000 மெற்றிக்தொன் சம்பா இந்தியாவில் இருந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள சம்பா அரிசி தொகையின் முதல் கட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நாட்டிற்கு கொண்டு வரப்படும் என அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் 50,000 மெற்றிக்தொன் சம்பா அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக கூட்டுத்தாபன தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான விலைமனுகோரல் நிறைவடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வார்னரின் கடைசி டெஸ்ட்; தோல்வியை பரிசளிப்போம்

## பாக்.வீரர் சூளுரை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர் டேவிட் வார்னரை வெற்றியுடன் திரும்ப விடமாட்டோம் என பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் ஷா அப்ரிடி சூளுரைத்துள்ளார்.

டிசெம்பர் 14ஆம் திகதி அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவின் அனுபவ வீரரான டேவிட் வார்னருக்கு இது கடைசி டெஸ்ட் தொடர் ஆகும்.





ஷாஹீன் ஷா அப்ரிடி. இன்னிங்ஸிற்கு வாழ்த் டேவிட் வார்னர் றேன். ஏனென் றால் அவர் களமிறங்கு உலக டெஸ்ட் சம் நாங்கள் முதலிட துள்ளார்.

109 டெஸ்ட்

"டேவிட் வார்னரின் இரண்டாவது துக்கள். ஆனால் வெற்றி யுடன் விடைபெற மாட்டார் என்று நம்பு கி எங்களுக்கு எதிராக கடைசி போட்டியில் கிறார்.

பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் த்தில் உள்ளோம்" என தெரி வித

போட் டிகளில் விளையா டியுள்ள வார்னர், 25 சதங்கள் மற்றும் 36 அரை சதங்களு டன் 8487 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

அதேபோல் பாகிஸ் தானின் ஷாஹீன் ஷா அப்ரிடி 27 போட்டிகளில் 105 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சு 6/51 ஆகும். எனவே ஆட்டம் சூடு பிடிக்கும் என ரசிகர்கள் ஆர்வத்தில் உள்ளார்கள் (5-6)

# நியூசிலாந்தை வீழ்த்திய பாகிஸ்தான் மகளிர் அணி




பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு மூன்று இருபது-20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்த ஆட்டத்தில் முதலில் பட்டிங் ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர் முடி வில் 6 விக்கெட்டை இழந்து 137 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் முனீபா அலி 35 ரன், அலியா ரியாஸ் 32 ரன் எடுத்தனர்.

இதையடுத்து 138 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து அணி பாகிஸ்தானின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டை இழ ந்து 127 ரன்களே எடுத்தது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி 10 ரன் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற் றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட குறித்த தொடரை 2-0 என பாகிஸ்தான் கைப் பற்றியது. இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் இறுதி இருபது-20 போட்டி [illegible] நடைபெறவுள்ளது. (நி-5-6)

# பட்மிண்டன் தரவரிசையில் அஸ்வினி-தனிஷா ஜோடி முன்னேற்றம்

உலக பட்மிண்டன் வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசைப்பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில், பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா-தனிஷா கிரஸ்டோ ஜோடி 4 இடங்கள் ஏற்றம் கண்டு 28 ஆவது இடத்தை பிடித்துள்ளனர்.

சமீபத்தில் நடந்த சையத் மோடி சர்வதேச போட்டியில் 2 ஆவது இடம் பெற்றதன் மூலம் அவர்கள் இந்த முன்னேற்றத்தை கண்டுள்ளனர்.

பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 12 ஆவது இடத்திலும் தொடருகிறார். பெண்கள் இரட்டையர் பிரிவில் திரிஷா ஜாலி-காயத்ரி ஜோடி 19 அவது இடத்திலும் உள்ளனர். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 150 மில்லியன் டொலர் கடனுதவி; உலக வங்கி இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வைப்புத் தொகை காப்புறுதித் திட்டம், மறுமூலதனமாக்கல் மற்றும் மத்திய வங்கியின் திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகிய கூறுகளின் கீழ் இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது.


இதன்படி ஜனாதிபதி சமர்ப்பித்த பிரேரணை, உரிய பிரேரணையை எட்டுவதற்காக அமைச்சர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். நாகலிங்கம் சிவகுருநாதன் (அப்பு)

(பிரபல புகையிலை வியாபாரி-மண்டைதீவு)

திதி: கார்த்திகை மாத தேய்பிறை தசமி



அப்பா நீங்கள் அணைத்தபோது அன்பைக் கண்டோம்
சிந்தித்தபோது சிரிப்பைக்கண்டோம்
உழைத்த போது உயர்வைக்கண்டோம்
அறிவை அறிய வைத்தபோது அறிவுலகம் கண்டோம்
ஊர் கூடி வாழ்ந்தபோது உறவுகளைக் கண்டோம்
இன்னல் துடைத்தபோது இறைவனாய் கண்டோம்
மறைந்தபோது தான் மரணத்தைக் கண்டோம்
அப்பா அன்பான, அழகான, அழகிய கூட்டை விட்டு
அவ்வுலகம் சென்றது ஏன்? எவ்வுலகம் சென்றாலும்
எந்நாளும் எம்முடனே
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(C-7818)

பிறப்பு 12.12.1944

இறப்பு 02.12.2018

குடும்பத்தினர்.

இறம்பைக்குளம், வவுனியா.

# இராசிபலன்

07.12.2023
கார்த்திகை 21, வியாழக்கிழமை
தசமி பின்னிரவு 4.00 மணிவரை

அத்தம் முழுவதும்
சுபநேரம் -7.47-9.17 மணிவரை
இராகுகாலம்-1.47-3.17 மணிவரை

சந்திராஷ்டமம்-பூரட்டாதி.

வளவன்

**மேஷம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**ரிஷபம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும் நாள்.

**மிதுனம்:** தொழிலை விரிபுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல ம்முடிவுக்கு வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்:** பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கொள்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பெரியோர் சந்திப்புண்டு.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்:** மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்திய வடக்குமாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் பண்பாட்டியல் காண்பியக்கூடக் கண்காட்சியும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. (படங்கள்:- தேவானந்தம், சப்தசங்கரி,யதுபாஸ்கரன்)

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை மற்றும் மல்லாகம் பகுதியில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட வன்முறைக் கும்பல் பயணித்த வாகனம் முல்லைத்தீவு - புதுக் குடியிருப்புப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன் புதுக் குடியிருப்பில் மறைந்திருந்த இரு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக, கடந்த திங்கட்கிழமை இளைஞன் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து, ஹயஸ் ரக வாகனத்தில் இவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வாள் வெட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இளைஞன் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வன்முறையில் ஈடுபட்ட கும்பலையும் வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்புக் கமரா பதிவுகளை ஆய்வு செய்தன் மூலம் வன்முறைக் கும்பல் பயணித்த வாகனத்தை அடையாளம் கண்டதையடுத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்த நிலையில் முல்லை- புதுக்குடியிருப்பு பகுதியில் பதுங்கி இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (நி-5-6-33)

## சோதனையிடப்பட்ட அரச பேருந்துகள்



(மன்னார்)

மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து நேற்று காலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட அரச பேருந்துகள் காலை 7.45 மணியளவில் மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் வைத்து மன்னார் வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸாரினால் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளன.

மக்களினால் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 3 பேருந்துகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-285)

# சிப்பாய்க்கு மரணதண்டனை விதித்தது நீதிமன்றம்

(மன்னார்)

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டின் போது கடமையில் இருந்த 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததுடன் ஒருவர் காயமடைந்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய்க்கு 14 வருடங்களின் பின்னர் மன்னார் மேல்நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் 2 ஒக்டோபர் 2009 அன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இராணுவ சேவையில் இருந்த போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு ஒருவர் படுகாயமடைந்தார். குறித்த வழக்கு விசாரணை தீர்ப்புக்காக மன்னார் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எம்.எம்.மிகால் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இரண்டு மனிதப் படுகொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில், மேல்நீதிமன்ற நீதிபதியால் குறித்த இராணுவ சிப்பாய்க்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. (நி-5-6-285)

# டெங்கு தாக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட தெருவெளி நாடகம்



(யாழ்ப்பாணம்)

அதிகரித்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு தெருவெளி நாடகம் நேற்று அச்சுவேலியில்முன்னெ டுக்கப்பட்டது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களால் மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த தெருவெளி நாடகம் அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது டெங்கு நோயை ஏற்படுத்தும் காரணிகள், மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம் அத்துடன் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பான விபரங்களும் குறித்த தெருவெளி ஆற்றுகையில் மேற்கொள்ளப்பட்டது. (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை ஒருபோதும் பிரித்து பார்க்க மாட்டோம்

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க

**(கொழும்பு) — மொழி, மத ரீதியான பிளவுபடுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடாது என புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.**



நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "எந்தவொரு காரணம் கொண்டும் அரசாங்கம் என்ற வகையிலோ அல்லது அமைச்சினாலோ மத ரீதியாக அல்லது மொழி ரீதியாக மக்களை. பிரிக்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.அரசமைப்புக்கு இணங்க, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னுரிமை வழங்கப்படும் அதே நேரம், ஏனைய மதங்களை ஒதுக்க வேண்டும் என்றோ அல்லது இரண்டாம் நிலைக்குத் தள்ள வேண்டும் என்றோ எங்கும் கூறப்படவில்லை.

தொல்பொருள் திணைக்களத்திற்குக்கூட நாம் வடக்கு - கிழக்கில் சிதைவடைந்துள்ள கோயில்களை புனர்நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளோம்.

இந்தாண்டுக்குள் நாம் இரண்டு கோயில்களை அடையாளம் கண்டுள்ளோம். இங்குள்ள இலட்சனைகள் வேறு எங்கும் இல்லாத காரணத்தினால் அவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.தமிழ் மக்களை ஒருபோதும் பிரித்துப் பார்க்க மாட்டோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

---

**UNIVERSITY OF JAFFNA,SRI LANKA**
**PHYSICAL EDUCATION UNIT**
**WALK -IN – INTERVIEW**

Walk in interview for the recruitment of the Visiting Coaches for the following fields will be held on **20.12.2023 at 10.00 a.m** at the Board Room of the University of Jaffna.

**Jaffna**
**Visiting Coaches in Chess- Men / Chess- Women / Karate / Rugby/ Wrestling**

**Kilinochchi Premises**
**Visiting Coaches in Badminton /Carrom/ Chess / Karate / Netball / Table Tennis/ Taekwondo/ Volleyball / Weightlifting**

**Qualification**

a)A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

OR

b)A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

OR

c)G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and implementing sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Coach | Rs. 750/- per hour |

**Note:** - This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of Appointment will be 1½ hours x 2 days x4 weeks x 10 months = 120 hours.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview with relevant certificates,NIC and **self-prepared application.** Copy of the relevant certificates and NIC should be attached with the self-prepared application.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**

(C-7820)

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.01.2024 - 31.12.2024 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2024

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 07/12/2023 இல் இருந்து 20/12/2023 ஆம் திகதி 3.00 மணி வரை

02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-21/12/2023 காலை 10.00 மணி வரை

03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-21/12/2023 காலை 10.15 மணிக்கு.
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், வாகனத்தரிப்பிடம்,இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 20/10/2023 ஆம் திகதிய வலம்புரி,தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
20.10.2023ஆம் திகதிய கேள்வி அறிவித்தலின் நிபந்தனை இலக்கம்.10 இல் சந்தையின் அண்மைய பகுதியில் இருந்து 1 கிலோமீற்றர் தூர அளவென்பது 500 மீற்றர் தூர அளவென இவ் அறிவித்தலின் மூலம் திருத்தப்படுகின்றது.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

(சி-7821)

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

2024 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை மீள்கேள்வி விபரம்

| தொ. இல | குத்தகை விபரம் | 2024 ஆம் ஆண்டு குத்தகைத் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - (அங்காடி நீங்கலாக) | 13,747,000.00 | 137,470.00 | 1000.00 | - |
| 2 | கோயிற் சந்தை வாகனத் தரிப்பிட நிலையம் | 72,000.00 | 720.00 | 500.00 | - |
| 3 | கொட்டடிச்சந்தை | 500,500.00 | 5,005.00 | 500.00 | - |
| 4 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 277,000.00 | 2,770.00 | 500.00 | 100.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 546,900.00 | 5,469.00 | 500.00 | 100.00 |
| 6 | நெல்லியடி மீன் சந்தை | 526,100.00 | 5,261.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | - | | |
| 7 | அந்திரான் சந்தை | 125,600.00 | 1,256.00 | 500.00 | - |
| 8 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 724,000.00 | 7,240.00 | 500.00 | 100.00 |
| 9 | நவிண்டில் சந்தை | 33,200.00 | 332.00 | 500.00 | - |
| 10 | மண்டான் சந்தை | 48,000.00 | 480.00 | 500.00 | - |
| 11 | உடுப்பிட்டிச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 225,600.00 | 2,256.00 | 500.00 | 100.00 |
| 12 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,665,000.00 | 16,650.00 | 500.00 | 100.00 |
| 13 | சாண்டா சந்தை கோழிக்கடை | 74,500.00 | 745.00 | 500.00 | 100.00 |

07.12.2023


**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# இந்தியாவை தாக்கிய மிக்ஜாம் புயல்

## இதுவரை 19 பேர் பலி



(டில்லி)
இந்தியாவைப் புரட்டிப் போட்ட மிக்ஜாம் புயலில் சிக்கி இதுவரையில் சுமார் 19 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் மாத்திரம் குறித்த புயலில் சிக்குண்டு 12 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு - மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நிலை கொண்டிருந்த மிக்ஜாம் புயல் இந்தியாவின் ஆந்திராப் பிரதேசக் கரையைக் கடந்துள்ளதுடன் இதன் வேகம் படிப்படியாக வலுவிழந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புயலின் தாக்கம் காரணமாக, தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் சென்னையின் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் தொடர்ந்தும் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# பணயக் கைதிகளுக்கு


# கொடுத்த ஹமா

## பரிசோதனையில் அம்

**(ஜெருசலேம்)**
**இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப் செய்யப்பட்ட பணயக் கைதிகளுக்கு போதைப்பொருள் கொடுக்க இஸ்ரேல் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**



ஹமாஸ் அமைப்பினரால் காசாவிற்கு பிடித்துச் செல்லப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்கும் போது அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது போல் காண்பிப்பதற்காகவே அவர்களுக்கு போதைப்பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.



# அமெரிக்கா பள்ளத்தாக்கில் விழுந்த பேருந்து

## 12 பேர் பலி

(வோஷிங்டன்)
அமெரிக்காவின் ஹோண்டுராசில் 60 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


டெகுசிகல்பாவில் இருந்து சுமார் 41 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பள்ளத் தாக்கின் அடிப்பகுதியில் உள்ள ஓடையில் விழுந்து பாலத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 10 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், 2 பேர் டெகுசிகல்பாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தனர்.

இதே... இற்கும் ... படுகாய... தாகவும் ... கின்றது.

படு... வர்கள் ... வண்டி ... வானூர்... துவமனை... செல்லப்... ணைப்பு... வித்துள்...

# நைஜீரிய இராணுவத்தின் குறி தவறியதால் 85 பொதுமக்கள் உயிரிழப்பு



(அபுஜா)
நைஜீரியாவில் இராணுவத்தின் ட்ரோன் தாக்குதலில் பொதுமக்கள் 85 பேர் உயிரிழந்துள்ளனர்.


ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் வடக்குப்பகுதியில் உள்ள ஆயுதக் குழுக்கள் மீது அந்நாட்டு இராணுவம் ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

கொண்டாட்ட நிகழ்வுக்காக ஒன்று கூடியிருந்த பொது மக்கள் மீது குறித்த தாக்குதல் நடந்ததால் 85 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அவசரகால மேலாண்மை நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தேடல் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இது வரை 85 பேரின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாள மக்களை போரில் ஈடுபடுத்த வேண்டாம்

## ரஷ்யாவிடம் கோரிக்கை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ங்கு போதைப்பொருள்
# ...ாஸ் அமைப்பினர்
## ...ம்பலம்

...மைப்பினரால் கைது
...டுக்கப்பட்டுள்ளதாக



...மைப்பின
...பிடித்துச்
...பணயக்
...விக்கும்
...மகிழ்ச்சி
...ல் காண
...வர்களு
...பொருள்
...ள்ளதாக
...மேலும்
. இந்த
மேலும்
...

பிடித்துச் செல்லப்பட்ட பணயக் கைதிகள் 51 நாட்கள் ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர்.

இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடைமுறைப்படுத்தப்பட்ட போதே இரு தரப்பிலிருந்தும் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதன்போது விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளை இஸ்ரேல் நாட்டிற்கு அழைத்துச் சென்று மருத்துவப் பரிசோதனை செய்த வேளை அவர்களது குருதியில் போதைப்பொருள் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.

அவர்களை விடுவிக்கும் போது அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக காட்டுவதற்காக ஹமாஸ் அமைப்பு அவர்களுக்கு போதைப் பொருளை உட்கொள்ளச் செய்துள்ளது என்பது தெரியவந்துள்ளதாக இஸ்ரேல் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. (நி-5-6)

# கிறிஸ்மஸ் காலத்தில் ஐரோப்பாவுக்கு ஆபத்து
## சர்வதேச ஊடகங்கள்



(பாரிஸ்)

ஐரோப்பா, இஸ்ரேல்-ஹமாஸ் போருக்கு மத்தியில் கிறிஸ்மஸ் விடுமுறை காலத்தில் "பயங்கரவாத தாக்குதல்களின் பெரும் ஆபத்தை" எதிர்கொள்ளவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்திற்கு அருகே நடந்த ஒரு பயங்கரமான தாக்குதலைத் தொடர்ந்து பிரெஞ்சு புலனாய்வாளர்கள் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

"இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் மற்றும் அது நமது சமூகத்தில் ஏற்படுத்தும் துருவமுனைப்பு, வரவிருக்கும் விடுமுறை காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் பயங்கரவாத தாக்குதல்களுக்கான மிகப் பெரிய ஆபத்து உள்ளது" என்று ஐரோப்பிய ஒன்றிய உள்துறை ஆணையர் யில்வா ஜோஹன்சன் தெரிவித்துள்ளார்.

இதனால் குறிப்பாக வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பை அதிகரிக்க ஐரோப்பிய ஆணையம் கூடுதலாக 30 மில்லியன் யூரோக்களை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

இதேவேளை 20 ...இற்கும் அதிகமானோர் ...படுகாயம் அடைந்துள்ள...தாகவும் தெரிவிக்கப்படு...கின்றது.

படுகாயம் அடைந்த...வர்கள் நோயாளர் காவு...வண்டி மற்றும் உலங்கு...வானூர்தி மூலம் மருத்...துவமனைக்கு கொண்டு...செல்லப்பட்டனர் என தீய...ணைப்புத் துறையினர் தெரி...வித்துள்ளனர். (நி-5-6)

# ஜேர்மனியில் கடும் பனிப்பொழிவு
## தரை,வான்வழி போக்குவரத்துகள் பாதிப்பு

(பெர்லின்)

தெற்கு ஜேர்மனியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டதை அடுத்து அங்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விமானப் போக்குவரத்து மற்றும் ரயில் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அங்கு நடைபெற இருந்த கால்பந்து போட்டி மாற்றும் பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கடும் பனிப்பொழிவால் 760 விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளன.

ஜேர்மனியின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான முனிச் மூடப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு மற்றும் குறைந்த வெப்பநிலை ஆகியவற்றால் ஜேர்மனியின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக சிரமத்திற்கு உள்ளாகியுள்ளன. (நி-5-6)

(காத்மண்டு)

உக்ரைனுடனான போர் தாக்குதலுக்காக தங்கள் நாட்டு குடிமக்களை ரஷ்யா வேலைக்கு எடுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என நேபாள அதிகாரிகள் ரஷ்யாவிடம் தெரிவித்துள்ளனர்.


உக்ரைன் போரில் 6 நேபாள கூலிப்படையினர் கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்த அழைப்பானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நேபாளத்தின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைன் போரில் ரஷ்யாவால் ஈடுபடுத்தப்பட்டு கொல்லப்பட்ட நேபாளிகளின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் அதில் உயிரிழந்த நேபாளிகளின் உடலை ரஷ்யா தாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர்கள் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது.

கூடுதலாக அறிக்கையில், ரஷ்யாவிற்கு போரில் சேவையாற்றி வரும் நேபாளிகளை விடுவிக்கவும் மற்றும் போர் தாக்குதலின் போது உக்ரைன் ஆயுத படையால் கைது செய்யப்பட்டவர்களையும் விடுவிக்க நேபாள அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவிற்கான நேபாள தூதர் மிலன் ராஜ் துலாதாரின் மதிப்பீட்டின் படி கூலிப்படை ஆட்களாக ரஷ்ய இராணு வத்தில் 150 முதல் 200 நேபாளிகள் பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார். (நி-5-6)

# கனடாவில் அதிகரிக்கும் கொவிட்



(ஒட்டாவா)

கனடாவின் ஒட்டாவாவில் கொவிட் நோயாளிகளின் வைத்தியசாலை அனுமதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறித்த பகுதியில் கொவிட் தொற்று உறுதியாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒட்டாவாவின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் வீரா எட்சஸ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு காலப் பகுதியை விடவும் இந்த ஆண்டில் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. கழிவுநீர் பரிசோதனைகளின் மூலம் தொற்று பரவுகை குறித்த தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் நோய்த்தாக்கத்தினால் அதிகம் பாதிக்கப்படலாம் எனவும் இதனால் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவப் பொருட்களுக்கு வரி அறவிடுதல் அசாதாரணமான விடயம் - ஹர்ச டி சில்வா

(கொழும்பு)

போஷாக்கான உணவுகள், உரங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு வரி விதிக்கப் பட்டுள்ளமையானது அரசாங்கத்தின் மிகவும் அசாதாரண செயல் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வரி வருமானம் அத்தியாவசியம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனாலும் வரி அறவிடும் முறையில் சாதாரணத் தன்மை ஒன்று இருக்க வேண்டும்.

பிரதானமாக பிள்ளைகளின் போஷாக்கிற்கு தேவையான உணவு வகைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

உரம், டீசலுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக மருத்துவ பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பொருட்களுக்கு வரி அறவிடுதல் மிகவும்



அசாதாரணமாக விடயம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# உக்ரைன் இராணுவத்தில் இணைந்து போரிட்ட மூன்று இலங்கையர்கள் பலி

(கொழும்பு)

ரஷ்ய இராணுவ தாக்குதலில், உக்ரைன் ஆயுதப்படையின் முதலாவது சிறப்புப் படையின் தளபதியாக பணியாற்றிய இலங்கையர் கப்டன் ரனிஷ் ஹெவகே உட்பட இலங்கையின் மூன்று முன்னாள் இராணுவ சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை உக்ரைன் முன்னோக்கிப் பாதையில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் இவர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

# உலக சந்தையில் கறுவா விலையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மற்றும் வலஸ்முல்ல பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரமாக காணப்படுவது கறுவா உற்பத்தியாகும்.

இலங்கையின் கறுவா உலக சந்தையில் மிகவும் அதிக விலைக்கு விற்பனையாகும். அதன் கேள்வியும் அதிகமாக காணப்படும். முக்கியமாக அல்பா கறுவா ஒரு கிலோ 5000 ரூபாவிற்கு விற்கப்பட்டது.

இருப்பினும் தற்போது சந்தையில் 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக இதனை வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் கடும் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 1000 | 1000 | 1000 |
| தக்காளி | 600 | 500 | 750 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 400 | 400 | 500 |
| கரட் | 400 | 450 | 450 | 500 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 300 | 250 | 220 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 550 | 300 | 400 | 600 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 600 | 2000 |
| போஞ்சி | 550 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 480 | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 1000 | 800 | 800 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 550 | 500 |
| வெங்காயப்பூ | --- | --- | --- | --- |
| முள்ளங்கி | 150 | 170 | --- | 300 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 30 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 150 | 250 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2982

**பிரகாசினி**




**பவித்திரன்**




**அபிசனா**




**வித்தகன்**




**மயூரி**




**மிதுளன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெய[illegible] பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தை வலுப்படுத்துவோம் எயிட்ஸ் நோயைத் தடுப்போம்

## மன்னாரில் விழிப்புணர்வு பேரணி முன்னெடுப்பு




(மன்னார்)

சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி "சமூகத்தை வலுப்படுத்துவோம் "எயிட்ஸ்" ஐ தடுப்போம்" எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பாலியல் நோய்கள், எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து ஆரம்பமானது.

குறித்த பேரணி மாவட்ட பொது மருத்துவமனை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியை சென்றடைந்து பின்னர் அங்கிருந்து மன்னார் பஸார் வீதியூடாக பொது விளையாட்டு மைதான வீதியை சென்றடைந்து மாவட்ட பொது மருத்துவமனையை வந்தடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவு மருத்துவ அதிகாரி மற்றும் மருத்துவர்கள், பணியாளர்கள், தாதியர்கள், சுகாதார பணியாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-5-6-285)

# க.பொ.த சா/த (2022) பரீட்சைப் பெறுபேறுகள்

## யாழ்/மத்திய கல்லூரி

ர.திசோத்மன்-9ஏ, ஸ்ரீ.ரமேஷ்-9ஏ, பா.சபேஷ்சர்மா-9ஏ, கோ.அபிலாஷ்-9ஏ,ப.ரிசிதரன்-9ஏ,ரா.அபிகாஷ்-8ஏ பி, கே.ஜனுசன்-8ஏ பி, சி.ஜதுபன்-7ஏ 2பி, ர.பிரதீசன்-6ஏ 2பி சி.

## யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்,புத்தூர்

கே.தனுஸ்கர்-9ஏ, கே.கேமிதன்-8ஏ பி, வி.அப்சனா-8ஏ பி, பி.சுவேதன்-8ஏ சி, பி.வைஸ்ணாந்-7ஏ பி சி, எம்.நித்தியா-7ஏ 2சி , எஸ்.துர்க்கா-7ஏ சி எஸ், ரி.பபித்திரன்-5ஏ 3பி எஸ், பி.நிக்ஷிகா-5ஏ பி 3 சி, எம்.டனுயா-5ஏ பி 2சி எஸ்.

## யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்

ச.சஞ்சீவன்-9ஏ, சி.அபிநயா-8ஏ பி, செ.தர்சிகா-8ஏ பி, இ.தமிழினி-7ஏ 2பி, உ.தனுஜா-7ஏ பி சி, ச.பவக்குமரன்-6ஏ 2பி சி, லி.சரண்யா-6ஏ பி 2சி, கோ.தர்சனா-6ஏ பி 2சி, ப.லக்சன்-6ஏ,3சி, ச.கோபிகாந்-6ஏ பி சி எஸ்.

## யா/கைதடி குருசாமி வித்தியாலயம்

தெ.பருஷ்ரனா-8ஏ எஸ், இ.சதுர்ஸனா-7ஏ 2பி, ம.திரிஷா-7ஏ பி சி.

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

### தமிழ் மொழிமூலம்

சி.லனுசன்- 9ஏ, மா.டிலான்கிருஸ்ணா- 9ஏ, சி.அபிநயா- 9ஏ, கு.டயானா- 9ஏ, ம.திவ்வீயராமானுஜன்- 9ஏ, பா.ஜிந்துசன்- 8ஏபி, ர.கோபிராம்- 8ஏபி, க.நிருதன்- 8ஏபி, க.நிவேஜிகா- 8ஏசி, நி.லதுசா- 8ஏசி, ந.ஸ்ரீகும்மாரன்- 8ஏசி, சி.ஸ்ரீஅஸ்வின்- 7ஏ,2பி, ற. பவிதன்- 7ஏ,2பி, க.நிரோஜா- 7ஏ,2பி, ந.கிசானி- 7ஏ2பி, சி.கோமகன்- 7ஏ 2பி, வி.ஆரணி- 7ஏ 2பி, கி.கிறிஸ்ரீனா- 7ஏ பி சி, சி.டனுஜன்- 7ஏ பி சி, ஸ்ரீ.துர்ஷாந்- 7ஏ பி சி, இ.டர்ஷிகா- 7ஏ பி சி, பா.டனுசன்- 7ஏ பி சி, இ.லம்சனா- 7ஏ பி சி, த.சந்தோஸ்- 7ஏ,பி,எஸ், த.யதுமிலன்- 7ஏ,2சி ம.தனுசாந்- 6ஏ 3பி, மோ.ரிஸ்வந்த்- 6ஏ 3பி, கு.பிரணவி- 6ஏ 2பி சி, க.புகழினி- 6ஏ 2பி சி, ர.சாங்கிருத்திகன்- 6ஏ பி 2சி, ம.எலக்ரீன்ராஜ்- 6ஏ பி,2சி, பா.விதுசயன்-6ஏபி2சி, தி.கேதாரணி-6ஏ,பி,2சி, சு.கஜனி- 6ஏ,2பி,எஸ், ரா.கேருண்யா- 6ஏபி சி எஸ், ம.சாருஜன்-6ஏ 2சி எஸ்.

### ஆங்கில மொழிமூலம்

சு.அபிராமி-8ஏ சி, சு.தமயந்தி- 8ஏ சி, கோ.கேசாந்- 8ஏ சி உ.சுபாங்கன்- 7ஏ 2பி, வி.புருனோ- 7ஏ பி சி, க.சிந்துஜன்- 6ஏ பி 2சி, ஜெ.மரியசெரோன்- 6ஏ 2பி சி, ச.மகிழினி- 6ஏ 2பி சி, சி.மதுக்சா- 6ஏ 2பி சி.


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2024 (01.01.2024-31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் **01.01.2024** ஆம் திகதி முதல் **31.12.2024** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - **07.12.2023 - 14.12.2023 ( மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - **15.12.2023** மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - **15.12.2023** மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **15.12.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல | விபரம் | கடைகளின் இல | பிணைப்பணம் | 2024 ம் ஆண்டுக்கான ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | நடமாடும் கடைகள் | | | |
| 01 | முத்திரைச்சந்தை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 02 | முத்திரைச்சந்தை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 03 | ஆரிய குளம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 04 | துரையப்பா விளையாட்டு அரங்கு | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 05 | பண்ணை கடற்கரை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 06 | பண்ணை கடற்கரை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 07 | பண்ணை கடற்கரை | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| 08 | சுப்பிரமணியம் பூங்கா | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 09 | பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 10 | பண்ணை மீன்சந்தை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 11 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 12 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 13 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்வதற்குரிய தள்ளுவண்டில்கள் | | | |
| 14 | தள்ளுவண்டில் | இல 01 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் | இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் | இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் | இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 18 | தள்ளுவண்டில் | இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 19 | தள்ளுவண்டில் | இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 20 | தள்ளுவண்டில் | இல 07 | 20,000.00 | 120,000.00 |
| | நெடுந்தூர பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடில்கள் | | | |
| 21 | குடில் | இல 01 | | 50,000.00 |
| 22 | குடில் | இல 02 | | 50,000.00 |
| 23 | குடில் | இல 03 | | 50,000.00 |

**மேலதிக தகவல்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.**

**ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.**

(C-7822)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 347



அந்த அறையில் சென்று தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தபோது அங்கே ஒரு சிறு பிள்ளை இருப்பது தெரிந்தது. ஏற்கெனவே நமக்குத் தெரிந்த பிள்ளைதான் அவன் சேந்தன் அமுதன்.

அவனுடைய குற்றமற்ற பால்வடியும் பச்சைப் பிள்ளை முகம் இளவரசிகளுடைய கவனத்தை கவர்ந்தது. அவனைக் குந்தவை பார்த்து, "பாடிக் கொண்டிருந் தது நீதானா!" என்று கேட்டாள்.

"ஆம், தாயே!" என்றான்.

"உற்சாகமாயிருக்கிறாய் போலிருக்கிறது!"

"உற்சாகத்துக்கு என்ன குறைவு, அம்மா! எங்கும் நிறைந்த இறைவன் இங்கேயும் என்னுடன் இருக்கிறார்!"

"பெரிய ஞானி போலப் பேசுகிறாயே? நீ யார் அப்பா? வெளியில் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"நான் பெரிய ஞானியுமில்லைசின்ன ஞானியுமில்லை. அம்மா! வெளியில் இருக்கும் போது பூமாலை புனைந்து இறைவனுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தேன். இங்கே பாமாலை புனைந்து மனத்திருப்தியடைகிறேன்!"

"நீ ஞானி மட்டுமல்ல் புலவன் என்றும் தெரிகிறது. இந்த ஒரு பாடல்தான் உனக்குத் தெரியுமா? இன்னும் பலவும் தெரியுமா?"

"இன்னும் சில பாடல்களும் வரும், ஆனால் இங்கு வந்தது முதல் இதையே பாடிக் கொண்டிருக்கிறேன்."

"ஏன்?" "இங்கு வரும் போது தங்க சாலையின் வழியாக வந்தேன். இதுவரை நான் பாத்திராத பத்தரை மாற்றுப் பசும் பொன் திரளைப் பார்த்தேன். அது 'பொன்னார் மேனியன்' திருஉருவத்தை எனக்கு நினைவூட்டியது."

"அதிர்ஷ்டசாலி நீ! பொன்னைப் பார்த்தால் பலருக்குப் பலவித ஆசைகள் உண்டாகின்றன. உனக்கு இறைவனின் திருமேனியின் பேரில் நினைவு சென்றது. உனக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லையா, அப்பா?"

"தாயார் மட்டும் இருக்கிறாள். தஞ்சைக் கோட்டைக்கு வெளியில் தாமரைக் குளத்தருகில் இருக்கிறாள்."

"அந்த அம்மாள் பெயர்?"

"வாணி அம்மை."

"நான் அந்த அம்மாளைப் பார்த்து நீ இங்கே உற்சாகமாயிருக்கிறாய் என்று சொல்கிறேன்." "பயனில்லை, அம்மா! என் தாய்க்குக் காதும் கேளாது பேசவும் முடியாது." "ஓகோ! உன் பெயர் சேந்தன் அமுதனா?" என்று இளைய பிராட்டி வியப்புடன் கேட்டாள்.

"ஆம், அம்மா! இந்த ஏழையின் பெயர் தங்களுக்குத் தெரிந்திருக்கிறதே?" "என்ன குற்றத்துக்காக உன்னை இங்கே கொண்டு வந்து சிறைப்படுத்தியிருக்கிறார்கள்?"

"நேற்றுவரை நான் செய்த குற்றம் இன்னதென்று எனக்கும் தெரியாமலிருந்தது. இன்றைக்குத்தான் "என்னவென்று தெரிந்தது?".

"ஒற்றன் ஒருவனுக்கு உதவி செய்த குற்றத்துக்காக என்னைப் பிடித்து வந்து சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தது."

"அது என்ன? எந்த ஒற்றனுக்கு நீ உதவி செய்தாய்?"

"தஞ்சைக்கோட்டை வாசலில் ஒருநாள் வெளியிலிருந்து வந்த பிரயாணி ஒருவனைச் சந்தித்தேன். அவன் இரவில் தங்க இடம் வேண்டும் என்று சொன்னான். என் வீட்டுக்கு அழைத்துப் போனேன். ஆனால் அவன் ஒற்றன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை."

"அவன் பெயர் என்னவென்று தெரியுமா?"

"தன் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன் என்று அவன் சொன்னான். பழைய வாணர் குலத்தைச் சேர்ந்தவன் என்றும் கூறினான்."

குந்தவையும் வானதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவருடைய உள்ளங்களும் ஒத்துப் பேசிக் கொண்டன.

வானதி, சேந்தன் அமுதனைப் பார்த்து, "எல்லாம் விவரமாகச் சொல், அப்பா!" என்றாள்.

சேந்தன் அமுதன் அவ்விதமே கூறினான். வந்தியத்தேவனைக் கோட்டைவாசலில் தான் சந்தித்ததிலிருந்து, பழுவூர் ஆட்கள் தன்னை ஆற்றங்கரையில் பார்த்துப் பிடித்துக் கொண் டது வரையில் சொன்னான். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யாருக்கு மரண தண்டனை

(நேற்றைய தொடர்ச்சி)

இதை நம் வீட்டில் வைத்து வளர்க்கும் பொறுப்பை என்னிடம் சக்கரவர்த்தி கொடுத்து விட்டார். இதற்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால், என் தலை உருளும்" என்று சொல்லிவிட்டு, தர்பாரில் நடந்ததை விளக்கினான்.

"எத்தனை பெரிய ஆபத்தை விலைக்கு வாங்கியிருக்கிறாய்?" என்று கூறிய அவன் மனைவி, வேறு வழியின்றி அதை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அன்று முதல், ஜாக்கிரதையாக அவள் அந்தக் கிளியைப் பராமரித்து வந்தாள்.

ஒருநாள் காலை, ஃபயிஸ் கான் கூண்டினுள் நோக்கியபோது, கிளி மல்லாந்து விழுந்திருந்தது, அதைக் குரல் கொடுத்து அழைத்துப், தொட்டுப் பார்த்தும் அது எழுந்தி ருக்கவேயில்லை. உடனே அவன் தன் மனைவியைக் கூவி அழைத்தான். அவளும் ஓடிவந்து, கிளியை சோதித்துப் பார்த்



தவள், "ஐயோ! கிளி இறந்து விட்டதே!" என்று கூச்சலிட்டாள்.

அதைக் கேட்டு ஃபயிஸ் கான், "ஐயோ! என் தலை உருளப்போகிறதே!" என்று தலையில் 'படீர்' 'படீர்' என்று அடித்துக் கொண்டு அழுதான். அவன் மனைவி அவனைத் தேற்றினாள். "நான் சொல்வதைக் கேளுங்கள். பீர்பாலிடம் சென்று முழு விவரத்தையும் சொல்லுங்கள். அவர் எப்படியாவது உங்களைக் காப்பாற்றி விடுவார்" என்று யோசனை கூறினாள். உடனே, ஃபயிஸ்கான் கூண்டைத் தூக்கிக்கொண்டு பீர்பால் வீட்டை நோக்கி ஓடினான். அவனைக்கண்ட பீர்பால், கூண்டைக் கையில் எடுத்து வந்திருக்கிறாயே! இந்தக் கிளியை வளர்ப்பதற்கு உன்னிடம் சக்கரவர்த்தி ஒப்படைத்திருந்தார் அல்லவா?" என்றார்.

"அதை நான் எப்படிச் சொல்வேன் பீர்பால்! ஜாக்கிரதையாக இதை வளர்த்தும், இன்று காலை இது திடீரென இறந்து விட்டது. இந்த செய்தியைக் கேட்டால், சக்கரவர்த்தி எனக்கு மரண தண்டனை தான் அளிப்பார்! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்று கூறினான் ஃபயிஸ்கான்.

"கடவுளே! நீ நன்றாக ஆபத்தில் சிக்கிக் கொண்டாயே! சரி, எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றி விட்டது. நீ வா என்னுடன்! சக்கரவர்த்தியை சந்திப்போம்" என்று கூறிய பீர்பால் முன்னே செல்ல, பின்னால் ஃபயிஸ்கான் நடுங்கிக் கொண்டே கூண்டைச் சுமந்து கொண்டு நடந்தான்.

அக்பர் தர்பாருக்கு வருமுன்னரே இருவரும் அங்கு வந்து விட்டனர். அக்பர் தர்பாரில் நுழைந்து, ஆசனத்தில் அமர்ந்ததும் அக் பர் அவரை நோக்கி "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

உடனே, கிளிக்கூண்டை எடுத்துக் கொண்டு அவரை அணுகிய பீர்பால், கிளியைச் சுட்டிக்காட்டி, "பிரபு! உங்களுடைய கிளி யோகாசனம் கற்றுக் கொண்டு இருக்கிறது. பாருங்களேன்!" என்றார்.

உற்றுப் பார்த்த அக்பர் கோபத்துடன் "என்ன உளறுகிறாய்? கிளி இறந்து விட்டது! எங்கே அந்த முட்டாள் ஃபயிஸ்கான்? அவனுக்கு மரண தண்டனை விதிக்கப் போகிறேன்!" என்றதும், பயந்து கொண்டே ஃபயிஸ்கான் முன்னே வந்தான். "தயவு செய்து நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்" என்ற பீர்பால் தொடர்ந்து, "பிரபு! அன்று ஒரு நாள் இந்தக் கிளியை வளர்க்கும் மிகப்பெரிய பொறுப்பை ஃபயிஸ் கானிடம் ஒப்படைத்த போது நீங்கள் சொன்னது நினைவு இருக்கிறதா "இந்தக் கிளி இறந்துவிட்டது என்ற தகவலைச் சொல்பவனுக்கு மரண தண்டனை" என்றீர்கள். அவ்வாறு சொன்னது நீங்கள்தானே!" என்றார்.

"ஆம்! அப்படித்தான் சொன்னேன்! இன்றும் அதையே சொல்கிறேன். என்னுடைய கிளி இறந்து விட்டது.

அதனால்" என்று அக்பரை இடை மறித்தார் பீர்பால். "கிளி இறந்து விட்டது என்று சொன்னது நீங்கள்தான்! அதை ஃபயிஸ்கான் சொல்லவில்லை. அதனால் இப்போது யாருக்கு மரண தண்டனை தரவேண்டும்?" என்றார் பீர்பால். இதைக் கேட்டு அக்பர் உரக்கச் சிரித்தார்.

"பீர்பால்! நல்ல சமயத்தில் என் கண்களைத் திறந்து விட்டாய். ஒரு கிளிக்காக என் நல்ல அதிகாரிகளில் ஒருவனுக்கு மரண தண்டனை அளிப்பது சரியல்ல!" என்றார். ஃபயிஸ்கானுக்குப் போன உயிர் திரும்பி வர, பீர்பாலுக்கு நன்றி கூறினான். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

~ மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தலைவர் பிரபாகரனை சிங்கள மக்கள் போற்றுவர்

எல்லாள மன்னனுக்கும் துட்டகைமுனுவுக்கும் போர் நடக்கிறது.

போரில் எல்லாள மன்னன் உயிர் துறக்க, துட்டகைமுனு வெற்றி பெறுகிறான்.

எல்லாள மன்னனின் வீரம், அவனின் ஆட்சித் திறன், நேருக்குநேர் போர் புரிகின்ற நேர்மை என்பன துட்டகைமுனுவை நெகிழ வைக்கிறது.

சிங்கள இனவாதப் போக்குடையவனாக இருந்த துட்டகைமுனு நாட்டு மக்களுக்கு ஓர் உத்தரவை விடுகின்றான்.

மன்னன் எல்லாளன் உயிர் துறந்த இடத்தில் அவனை வணங்கி அந்த மாவீரனுக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்பது துட்டகைமுனுவின் கட்டளையாக இருந்தது.

ஆக, நேர்மையான வீரனை, ஒழுக்கமுள்ள ஒரு தலைவனை இந்த உலகம் நிச்சயம் போற்றும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆம், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு நேர்மையான தலைவன். அப்படியான ஒரு தலைவன் இனி வரப்போவதில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் தொடர்பில் கமால் குணரத்ன ஏலவே தனது கருத்தை தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஒரு சிறந்த ஒழுக்கமுள்ள தலைவன் என்பதை அவர் பதிவு செய்துள்ளார்.

இதுதவிர, இராணுவத்தின் உயர் பதவிகளில் இருந்த பலரும் விடுதலைப் புலிகளின் ஒழுக்கத்தை, தியாகத்தை, தலைவர் பிரபாகரனின் வீரத்தை நேர்மையைப் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.

அதேநேரம் அவ்வாறு பிரபாகரனைப் புகழ்ந்துரைத்த சிங்கள இராணுவ அதிகாரிகள் மீது இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்குக் காரணம் உண்மைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதென்பதுதான்.

எனினும் மாவீரர்களை நினைவேந்துவது, தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை வைத்திருப்பது தொடர்பில் பொலிஸாரும் படையினரும் சீற்றம் கொள்வதுதான் ஏன் என்று புரியவில்லை.

எதுவாயினும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வீரத்தை அவரின் ஒழுக்கத்தை, நேர்மையை சிங்கள மக்கள் நிச்சயம் போற்றுவர்.

அவ்வாறானதொரு தலைவன் தமக்குக் கிடைக்கவில்லை என்ற ஆதங்கமும் அவர்களிடம் இருக்கவே செய்யும்.

உண்மை. இந்த நாட்டின் ஒரு சிறந்த தலைவன் பிரபாகரன் என்று கூறுவதில் சிங்கள மக்கள் பெருமையடைகின்ற காலம் நிச்சயம் வந்தே தீரும்.

அவ்வாறான காலம் வரும்போது தலைவர் பிரபாகரனை சிங்கள மக்கள் ஏற்றுவர் போற்றுவர்.

ஏன்? தென்பகுதியில் தலைவர் பிரபாகரனின் உருவச்சிலை நிறுவப்பட வேண்டும் என்ற கருத்துக்கூட எழும். அதுவும் சாத்தியமாகும். இது காலத்தின் அசைவில் நடந்தே ஆகும்.

# கல்விக் கட்டமைப்பை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுசரணையாளர்களின் ஆதரவுடன் கல்விக் கட்டமைப்பை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர்,

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 280 பில்லியன் ரூபா நிதியுடன் மொத்தமாக 517 பில்லியன் ரூபா இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களையும் சாதாரண பிள்ளைகள் கல்வி கற்கும் வகுப்பறைகளில் இணைத்துக்கொள்ளக் கூடிய வகையில் inclusive education முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

பல்வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் STEAM கல்வியின் மூலம் கட்டமைக்கப்பட்ட மனித வளமாகும். அதேபோன்று, இந்நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த, விஞ்ஞானம், தொழில்நுட்பம் பொறியியல், கலை, கணிதம் ஆகிய துறைகள் மூலம் பிள்ளைகளுக்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட வேண்டியுள்ளதோடு, அவற்றை முன்னுரிமைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முழுமையான கல்விக் கட்டமைப்பையும் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். 1-5 / 6-9/ 10-13 ஆம் தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும்.

எதிர்காலத்தில் க.பொ.த சாதாரணப் பரீட்சை தரம் 10 இலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை தரம் 12 இலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

# பழைய பொருளாதார முறைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பழைய பொருளாதார முறைகளை தொடர்ந்தால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் அரச அதிகாரிகளும், முழு நாட்டு மக்களும் பெரும் தியாகங்களைச் செய்தனர்.

அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இம்மாத நடுப்பகுதியில், நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவிக்க உள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த புதிய பொருளாதார முறைகளின்படி முன்னேற வேண்டும்.

அப்படி இல்லாமல், பழைய பொருளாதார முறைகளை அமுல்படுத்தினால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது. மத்திய வங்கி ஏற்கனவே பணம் அச்சிடுவதை நிறுத்தி விட்டது. அபிவிருத்திக்காக அரச வங்கிகளில் இருந்து கடன் பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகள் இல்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது.

இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளி மற்றும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அரசின் செலவினங்களை குறைக்கவும், அரசின் வருவாயை அதிகரிக்கவும் புதிய திட்டங்களை தயாரித்துள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திருவுருவச்சிலை திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும் திருவுருவச்சிலை திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கரணவாய் கிழக்கு கரவெட்டியில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை ஆசிரியர் இராசையா கருணாகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, மகாறம்பைகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
"ஏன் என் உரிமைக்காகவும், விடுதலை வேட்கைக்காகவும் நான் போராட வேண்டும், என்னை உங்களின் உயரிய உறவுகளில் ஒருத்தியாய் நினைப்பீர்களானால்!...
மாற்றம் வெறும் வார்த்தைகளினால் மட்டுமல்ல. மனதின் எண்ணங்களினாலேயே சாத்தியமாகும்"...
16 2023
யாழ் சமூக செயற்பாட்டு மையம்
Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆனாலும் குறித்த ஒரு நபர் அறியாமல் அல்லது தவிர்க்க முடியாத நிர்ப் பந்தம் காரணமாக இலஞ்சம் கொடுத்துவிட்டு அது தொடர்பில் உடனடியாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப் பாடு செய்வார் எனில் அவரை சட்டம் குற்றவாளியாக அன்றி இலஞ்சம் கேட்ட அதிகாரியின் சூழ்ச்சியால் அந்த சந்தர்ப்பத்தில் சிக்குப்பட்ட ஒரு அப்பாவியாகவே கருதும்.

எனினும், இலஞ்சம் கொடுப்பதும் குற்றமாகும் எனத் தெரிந்து வைத்துள்ள நாம், ஒருவர் இலஞ்சம் கேட்கும் போது அதைக் கொடுப்பதற்கு முன்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய வேண்டும் என்றே சட்டம் பெரிதும் வலியுறுத்துகின்றது. இலஞ்ச மற்றும் ஊழல் குற்றங்களுக்கு நமது நாட்டுச் சட்டம் கடுமையான தண்டனைகளை வரையறுத்துக் கூறியுள்ளது.

இலஞ்சத்தைப் பரிந்து கேட்டல், ஏற்றுக் கொள்தல், கொடுத்தல் அல்லது இதில் ஏதும் ஒன்றைச் செய்ய எத்தனித்தல், சூழ்ச்சி செய்தல் அல்லது ஆணை வழங்குதல் போன்ற குற்றங்களுக்கு ஒருவர் குற்றவாளியானால், அவருக்கு 7 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையுடன் ரூபா 5000/= திற்கு மேற்படாத தண்டப் பணமும் விதிக்கப்படும்.

அத்துடன் நின்றுவிடாது, இலஞ்சத்திற்காக பரிமாற்றஞ் செய்யப்பட்ட அவாநிறைவொன்றின் (பணம் அல்லது பொருள் அல்லது பணத்தால் அளவிடமுடியாத ஏனைய விடயங்கள்) பெறுமதிக்கு சமமான தொகையும் தண்டப் பணமாக அறவிடப்படும்.

அதேவேளை, ஏதேனுமோர் ஆதனம் இலஞ்சத்தின் மூலம் பெற்றுக் கொன்டதாக நிரூபிக்கப்படும் போது மேற்படி தண்டனைகளுக்கு மேலதிகமாக இலஞ்சத்தால் பெற்றுக் கொண்டதாக தீர்மானம் செய்யப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்கு குறையாத அல்லது அதன் மும்மடங்கிற்கு மேற்படாத தொகை தண்டப்பணமாக தீர்க்கப்படும் அல்லது குறிப்பிட்ட ஆதனம் அரசுடைமையாக்கப்படும்.

மேலும், ஒருவர் ஊழல் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டின் 10 ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்குச் சிறைத் தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப் பணம் அல்லது மேற் கூறிய இரண்டும் தண்டனைகளாக வழங் கப்பட வேண்டும் என சட்டம் வலி யுறுத்துகின்றது.

இத்தண்டனைகளுக்கு மேலதிகமாக குற்றச் செயலின் தன்மைக்கு ஏற்ப குற்றவாளி தனது தொழிலை அல்லது பதவியை இழக்க நேரிடுவதோடு ஓய்வூதியம், பணிக் கொடை போன்றவற்றுக்கான உரித்தும் அவருக்கு இரத்துச் செய்யப்படும். அத்தோடு, அவர் பாராளுமன்றத் தேர்தல் எனின் 7 ஆண்டுகளுக்கும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனில் 5 ஆண்டுகளுக்கும் வாக்காளராக பதிவு செய்வதற்கு, வாக்களிப்பதற்கு, தெரிவு செய்யப்படுவதற்கு உரிய தகமைகளை இழக்க வேண்டியும் ஏற்படலாம்.

அத்தோடு, அரசின் அல்லது இலஞ்ச சட்டத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனங்களில் தொழில் ஒன்றை அல்லது பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் அவர் முற்று முழுதாக இழக்க வேண்டி ஏற்படும்.

### இலங்கை மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம் இல 7. 1840

இலங்கை மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம் ( Prevention of Frauds Ordinance) காலத் தால் முந்தியதும் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டமுமாகும். இது போலியான ஆவண தயாரிப்பு மற்றும் சொத்துக்களுடன் தொடர்புடைய மோசடிகளை கையாள்வதை நோக்காக கொண்டது. இதில் வகையிடப்பட்ட சில குற்றங்கட்கு நீதிமன்ற பிடியாணை இன்றி பொலிசாருக்கு குற்றவாளிகளை கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம் இல.1 1975

இச்சட்டம் பொதுவாக அரசியல் வாதிகளையும் அரச உயர் வருமானம் பெறும் அதிகாரிகளையும் தனது பரம்பெல்லையினுள் உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டத்தின் படி உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்கட்கு வேட்பாளராக விரும்புவோரும், தெரிவு செய்யப்பட்டோரும் அரச நிறைவேற்று செயற்குழு தர உத்தியோகத்தர்களும் தமது முழுச் சொத்துப் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்பு ஐந்து வருடங்கட்கு ஒரு தடவை அவ்வறிக்கை இயற்றைப்படுத்தப்பட வேண்டும். இச் சட்டத்தின் கீழ் போலியான விபரத்தை வெளிப்படுத்தல் மற்றும் போலியான விபரத்தை வழங்கல் என்பன தண்டனைக்கு உரிய குற்றங்களாகும். பொதுவாக 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப் புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் குற்றங்களாக பின்வருவன முன் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு நபர் வருடாந்தம் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்தலை வழங்க தவறுவது, பிழையான தகவல்களை வழங்குவது, வேண்டுமென்றே தகவல்களை மறைப்பது, இலஞ்சம் மற்றும் ஊழல்பற்றிய சாரத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் வேண்டப்படுமிடத்து தகவல்களை வழங்கத் தவறுதல் ஆகியன சட்டத்தின் படி குற்றமாகும்.

நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெறும் வழக்கொன்றினால் குற்றத்தீர்பளிக்கப்பட்டால் ரூபா 1000.00 அதிகமில்லாத தண்டப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு அதிகரிக்காத சிறைத் தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்.

### பொதுச் சொத்துக்கள் தொடர்பான குற்றங்கள் சட்டம் இல.12, 1982

இச்சட்டம் அரச உடைமை சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடை செய்யும் முகமாக அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அரச நிதியை சுயலாபத்திற்காகக் கையாடல் செய்வது மற்றும் அரச சொத்துக்களைச் சுயலாபத்திற்காக முறை தவறி பயன்படுத்துவது என்பன தண்டனைக்குரிய குற்றங்களாக வகையிடப்பட்டுள்ளன.

### நிதி மோசடி தடுப்புச் சட்டம் இல.5 ,2005

இச்சட்டம் இலத்திரனியல் யுகத்தின் வேகத்தோடு சட்டத்தைச் சமாந்தரமாக்க எடுத்த முயற்சி என்பதற்கும் எடுத்துக் காட்டாகும். இச்சட்டம் சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தை (கறுப்புப் பணம்) பரிமாற்றங்கட்கு (வெள்ளைப்பணமாக மாற்றல்) உட்படுத்துவதைத் தடை செய்கின்றது.

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் இல 12, 2016

பொது மக்கள் தகவல்களை அணுகிக் கொள்வதனை ஒழுங்குபடுத்தும் முகமாக 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் 2016 ஜூன் 24ஆந் திகதி பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்டது 2017பெப்ரவரி03ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் அமைச்சுக்கள் / அரச அதிகாரசபைகள் சார்பில் இந்த சட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த சட்டத்தின் பிரகாரம், தகவல் அறியும் உரிமைக்கான கோரிக்கைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் 14 நாட்களுக்குள்ளும், விஷேட ஏற்பாடுகளுக்கு அமைய சில சந்தர்ப்பங்களில் அதிகபட்சம் நீடிக்கப்பட்ட 21 நாட்களுக்குள்ளும் பதிலளித்தல் வேண்டும்.

இந்த சட்டத்திற்கு அமைவாக, ஏதேனும் தகவல்களை பெறுவதற்காக இந்த படிவத்தை பூர்த்தி செய்வது என்பது கட்டாயமானதல்ல என்பதுடன், தேவையான தகவல்களை அடையாளங்கண்டு கொள்வதற்கு போதுமான தகவல்களுடன் கூடிய ஏதேனும் எழுத்து மூலமான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்வழி கோரிக்கைகளும் போதுமானது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரஜைகள் ஊழலை எதிர்த்து நிற்பதற்கும் ஊழல்களை ஆதாரபூர்மாக வெளிப்படுத்துவதற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பெரிதும் பயன்படுகின்றது. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பிரஜைகள் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணைக்குழுவின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆணைக்குழுவானது பிரஜைகளுக்கான தகவல் உரிமையை உறுதி செய்கின்ற அதே வேளையில் பொது அதிகார சபைகள் தகவல் அதிகாரிகள் தகவல்களை பூரண சுதந்திரத்துடன் கையாள்வதையும் உறுதிசெய்கின்றனர்.

சில சமயங்களில் தகவல் அறியும் சட்டத்தை உபயோகித்து பிரஜைகள் தகவல்களை கோருகின்ற சந்தர்ப்பங்களில் தகவலதிகாரிகள் தகவல்களை வழங்குவதில் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதாவது, மேதிகாரிகளின் அழுத்தம், தகவலை வழங்க விடாமல் தடுத்தல் போன்ற காரணங்களால் தகவலதிகாரிகளால் தகவல்களை வழங்க முடியாதிருந்தது. அவ்வாறான வேளைகளில் தகவலதிகாரிகள் ஆணைக்குழுவின் உதவியை நாடிய வேளையில் தகவலதிகாரிகளுக்கு தகவல்களை கையாள பூரண சுதந்திரம் இருப்பதை ஆணைக்குழு மீள உறுதி செய்கின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

எல்லை தாண்டி மீன்பிடித்த வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் ஒரு படகுடன் கைதான தமிழக மீனவர்கள் மன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை நெடுந்தீவுக் கடற்பரப்பில் இரண்டுபடகுகளுடன்கைதான தமிழக மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ம-7,33,60)

## 1,534 டெங்கு...

ஆக அதிகரித்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 78,000ஐ தாண்டியுள்ளதாக அதன் பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதத்தில் 7995 ஆக இருந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக நிலவிய மழையுடனான வானிலையினால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வருடத்தில் இதுவரை 46 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். (ம-7)

## விலைமதிப்பற்ற...

அத்துடன், உள்ளே நீர்க்குமிழிகள் இருப்பதால் குறித்த இரத்தினக்கல் சிறப்பு வாய்ந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், குறித்த இரத்தினக்கல்லின் உரிமையாளர் அதனை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு வழங்கியுள்ளதாகவும், சர்வதேச சந்தையில் அதனை விற்பனை செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## கார்களின்...

வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி கிடைக்காமையே இந்நிலைக்குக் காரணம் என வாகன வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலை தொடருமானால் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-7)

## புலிகளை...

மாவீரர் தின நிகழ்வில் புலிகளின் மீளுருவாக்கம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

புலிகளை நினைவுகூரும் வகையில் ஆடைகளை அணிந்தமை, புலிச் சின்னம், கொடிகளை ஏந்தியமை உட்பட்ட பல்வேறு விடயங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும்,

அது புலிகளின் மீளுருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்ற அச்சம் தென்னிலங்கையில் இருப்பதால் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி, நீதியமைச்சர் விஜயதாஸவையும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸையும் கேட்டுள்ளார்.

இதனையடுத்து மாவீரர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்கள் உடனடியாக விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் புலிகளின் சின்னங்களுடன் நினைவுகூர்ந்தவர்கள் விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. (ம-7)

## தமிழ் மக்களின்...

இடம்பெற்ற புத்தசாசனம் மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு மீதான வரவு செலவு திட்ட விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்ட விடயத்தினை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நிலங்களை பிடிப்பதற்கும், அதற்கான ஆதாரங்களை முன்வைப்பதற்கும் இனவாதத்தினை பிரயோகிக்கின்றீர்கள்.

இவ்வாறான ஒரு பின்னணியில் நீங்கள் எப்படி இந்த நாட்டை கட்டியெழுப்பப் போகின்றீர்கள். நாட்டை எவ்வாறு முன்னேற்ற போகின்றீர்கள்.

எத்தனை விகாரைகளை நெடுந்தீவிலும் கௌரிமுனையிலும் கட்டலாமா? என சிந்திக்கின்றீர்கள்.

ஆனால் பொலநறுவையிலும் அநுராதபுரத்திலும் உள்ள சிவ ஆலயங்கள் இதுவரை கட்டப்படவும் இல்லை புனரமைக்கப்படவும் இல்லை" என்றார். (ம-7)

## மூன்று...

கின்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, நவம்பர் 08ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் உள்ளிட்ட மூன்று பொலிஸ் சாட்சியங்கள் தமது சாட்சியை பதிவு செய்தன.

அத்துடன் உயிரிழந்த இளைஞனின் சகோதரி மற்றும் உயிரிழந்த இளைஞன், அவருடன்கைதான இளைஞன் ஆகிய இருவருடன், பிறிதொரு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு, ஒரே சிறைக்கூடத்தில், தடுத்து வைக்கப்பட்டு இருந்த இளைஞனும் மன்றில் தோன்றி சாட்சியம் அளித்தனர்.

அதனை அடுத்து வழக்கினை நாளை வெள்ளிக்கிழமைக்கு நீதவான் ஒத்திவைத்தார். அதேவேளை நாளை அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## புலி...

தமிழர் தாயகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சி தொடர்ந்தால் எமது படையினரால் சாகடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள்கூட உயிர்த்தெழுவார்கள்.

அவர்களின் தனிநாட்டுக்கான போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும். எமது படையினரின் தியாகம்வீணாகிப் போகும்.

அந்தளவுக்கு ரணிலின் ஆட்சி மோசமடைந்துசெல்கின்றது. வடக்கு, கிழக்கில் கடந்த மாதம் 'மாவீரர் நாள்' என்ற பெயரில் தமிழர்களால் அரங்கேற்றப்பட்ட நிகழ்வுகள் ரணில் அரசின் முழு அனுமதியுடன்தான் நடைபெற்றன.

மரணித்த புலிகளை நினைவேந்த அனுமதி வழங்கிவிட்டு அதில் பங்கேற்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரணிலின் அரசு பாராளுமன்றத்திலும் வெளியிலும் கருத்துக்களை வெளியிடுவது வேடிக்கையானது.

இப்படிக்கூறி சிங்கள மக்களை ஏமாற்றலாம் என்று ரணில் அரச தரப்பினர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். மைத்திரி - ரணில் தலைமையிலான அரசுதான் புலிகளை நினைவேந்த முதலில் அனுமதி வழங்கியது.

இப்போது ரணில், மொட்டுக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்துவிட்டு மீண்டும் புலிகளைப் பகிரங்கமாக நினைவேந்த அனுமதி வழங்கியுள்ளார்" என்றார். (ம-7)

## உழவு இயந்திர...

டான் பகுதியில் கடந்த மாதம் 21ஆம் திகதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சிவலோகநாதன் விந்துஜன் என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன், யாழ்.போதான மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளான். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 0146
Q 4 6 7 9 5 8 Q

தன நிதானய
திகதி -2023.12.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1350
N 06 52 71 78 N
26360

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3562
சீட்டிழுப்பு திகதி 06.12.2023
R 04 12 13 60
R 00402

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 0629
கன்னி 07 32 54 58 கன்னி
02186 11

மஹஜன சம்பத
திகதி 2023/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 5320
L 5 3 9 3 3 7

மெகா பவர்
திகதி 06/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1668
K 07 08 34 60 70
53541

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 06.12.2023 வெற்றி வாரம் 028
V 0 8 9 7 6 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,181,051.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2294 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.06 தினம் புதன்கிழமை
01 07 61 71 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,995,204.00

சனிதா Shanida
திகதி 2023.12.06 வெற்றி வாரம் 4455
19 34 44 59 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,015,884.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4006 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.06 தினம் புதன்கிழமை
14 28 52 62 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,981,976/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 35 15 16 27 34
சீட்டிழுப்பு வாரம் 1470
2023.12.06 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 473,993,994.20

ஜயோதா Jayoda
திகதி 2023.12.06 வெற்றி வாரம் 1980 வர்ணம் மஞ்சள்
01 31 43 49 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,836,920.00

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2120
சீட்டிழுப்பு திகதி : 2023.12.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,160,056/-
22 38 41 62 E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ் இந்து உயர் குலம் 1997 அவிட்டம் 4 ஆம் பாதம் 4 இல் செவ். பாவம் குறைந்த அரச தொழில் செய்யும் விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை. (18123)

077 367 1062

## தரம் 6 (2024) குழு வகுப்புகள்

- குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள்
- தொடர் பரீட்சைகள்
- ஒவ்வொரு மாணவரிலும் தனிக் கவனம்
- அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்

(18118)

NEWTON GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎-077 792 3653

## ENGLISH MEDIUM CLASSES Gr.6 - O/L

- Night Classes
- Flexible Time Table
- Individual Attention
- Frequent Exams

(18118)

NEWTON GROUP CLASSES
Near TCT Super Market
✆-077 792 3653

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7828)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18088)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரம் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

புதிய பிரிவு ஆரம்பம்

## A/L - 2025 கலை, வர்த்தகம்

09.12.2023 சனி
காலை 9 மணி

DMI Jaffna

தொடர்பு:
D.Sam - 077 848 0604 (18132)

## தரம் 6 (2024) கணிதம்

ஆசிரியர்
திரு.T.அற்புதராஜா

புதிய பிரிவு
ஆரம்பம் : 09.12.2023
சனி 3.00 P.m

இல.202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (18128)

T.P : 077 722 2478

## TECHNO WORLD தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

## A/L 2025 புதிய கல்வியாண்டு

## தொழில்நுட்ப பிரிவு

- திகதி 09.12.2023 (சனிக்கிழமை)
- நேரம் : காலை 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு) (C-7824)

077 017 5346

## காணி விற்பனைக்கு 14 1/2 பரப்பு மட்டும்

- தெல்லிப்பளை சந்தியிலிருந்து 800m
- வைத்தியசாலை 300m
- யூனியன் கல்லூரி
- பஸ் நிலையம், புகையிரத நிலையம்
- விவசாய நிலம், நன்னீர் ஊற்று, மின்சார இணைப்பு
- குடியிருப்புக்கள் உள்ள நல்ல பாதுகாப்பான சூழல்
- பண்ணைகள் அமைக்க உகந்த இடம்.

தரகர் தேவையில்லை (18129)

077 181 7420

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18097)


## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை மகேசலிங்கம்

(கட்டிட ஒப்பந்தக்காரர்)

மலர்வு 28.04.1939 உதிர்வு 06.12.2023

இல. 826/14, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மகேசலிங்கம் (கட்டிட ஒப்பந்தக்காரர்) அவர்கள் நேற்று (06.12.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (முன்னை நாள் வர்த்தகர் - தட்டாதெரு ) - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் தர்சினி (அதிபர் பயிற்சியாளர் - யாழ். டிறிபேக் கல்லூரி ) அவர்களின் அன்புத் தந்தையும் சுதாகரன் (உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் - இ.போ.ச. வட மாகாணம்) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இந்திராணி, ஆனந்தலிங்கம் (முன்னாள் சாலைப் பரிசோதகர் - இ.போ.ச, நியூசிலாந்து ) சந்திரலிங்கம், புஸ்பராணி, யோகராணி, அற்புதராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யதிஷா (2ம் வருட மாணவி மொறட்டுவ பல்கலைக்கழகம்), டிவாகன் (உயர்தர மாணவன் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் புஸ்பராணி, கனகம்மா, சண்முகசுந்தரம் (யாழ். மாவட்ட கூட்டுறவு சபை முன்னாள் செயலாளர் ) ஆகியோரின் மைத்துனரும் சதீஸ்-பிறேமிலா (லண்டன்), குமரேஸ்-நித்தியா (லண்டன்), வித்தியா-யாதவன் (நியூசிலாந்து), ஸ்ரீஜனனி-கபிலன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பெரியப்பாவும் சிந்துஜா விக்னேஸ்வரன், (வைத்தியர் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), நிருஜா-றமேஸ் (உத்தியோகத்தர் - இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பெரிய மாமனாரும் துஷான், அட்ஷயா, கனுஷான், நிஷாலி, ஜஸ்வின், யுவின், அட்சயா, அம்சயன், டஸ்விகா, கவிநயா ஆகியோரின் பெரிய தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
021 222 1521

இல. 826/14, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (18133)


## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம். (18106)
0777 554 528

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோயிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (C-7817)
077 948 4582

## A/L - 2025 பௌதிகவியல் N-பரபு

சனி, ஞாயிறு 8 a.m

புதிய, தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும். (C-7827)

DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
✆-077 936 5087

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (18131)
077 814 7389, 077 986 5457


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org